

We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்
# (CURRENT AFFAIRS)
## ஜனவரி - 2020

*We Are Here..!! To Guide You..!!*



# WeShine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (CURRENT AFFAIRS)

## ஜனவரி - 05.01.2020

We Shine Academy™
guiding you to get through


Main Office @

**WeShine Study Circle**
Chrompet, Chennai
Phone: 8939144344, 8939244344

Branch Office @
**WeShine Study Circle**

Plot No: 47/60, "AK" Block,
7th Main Road, Anna Nagar
Chennai, Tamil Nadu – 600 040.

3rd Floor, West Wing, GokulArcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamil Nadu– 600020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்


- தேசிய நிகழ்வுகள்
- அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்
- விருதுகள்
- விளையாட்டு செய்திகள்









## தேசிய நிகழ்வுகள்

- சென்னை-ஹௌரா, சென்னை-ஓக்லா உள்ளிட்ட 100 வழித்தடங்களில், ரூ.22,500 கோடியில் **தனியார் மூலம் 150 ரயில்களை இயக்குவதற்காக, நீதி ஆயோக் அமைப்பு மற்றும் ரயில்வே சார்பில் திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.**
    - இத்திட்டத்தின்கீழ், சந்தை அடிப்படையிலான கட்டணத்தை வசூலிக்கும் உரிமை தனியாருக்கு அளிக்கப்படும். தனியார் மூலம் ரயில்களை இயக்குவது இத்துறையில் நவீன தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்த உதவுவதுடன், பயணிகளுக்கு உலகத் தரத்திலான சேவையும் உறுதி செய்யப்படும்.
    - **செய்தி துளிகள் :**
        - நீதி ஆயோக் என்பது இந்தியாவின் மத்திய திட்டக்குழுவுக்கு மாற்றாக அமைக்கப்பட்டுள்ள ஒரு குழுவாகும். இதில் நிதி (NITI - National Institution for Transforming India) என்பதன் பொருளாகும்.
        - இது 2015, ஜனவரி மாதம் 1ஆம் தேதியிலிருந்து செயல்பட துவங்கியுள்ளது. இதன் தற்போதைய துணைத் தலைவராக ராஜீவ் குமார் உள்ளார்.

- **புதியதாக வளர்ந்து வரும் மற்றும் மூலோபாய**

We Shine Academy

**தொழில்நுட்பங்கள் (NEST) பிரிவை அமைப்பதாக வெளிவிவகார அமைச்சகம் அறிவித்தது .**

- ○ நாட்டின் மாநிலங்களிடையேயும், வெளிநாடுகளிலும் முதலீட்டு ஒருங்கிணைப்பை அதிகரிக்க இந்த பிரிவு செயல்படும்.
- ○ இது 5 ஜி மற்றும் செயற்கை நுண்ணறிவு துறையில் வெளிநாட்டு பங்காளிகளுடன் ஒத்துழைக்க உதவும்.
- ○ **செய்தி துளிகள் :**
  - ▪ ஒரு மூலோபாய மனநிலையை உருவாக்குவது மற்றும் முடிவெடுக்கும் செயல்முறையில் கவனம் செலுத்துதல், அடிப்படை பொருளாதார காரணிகளையும் உலகளாவிய ஒழுங்கையும் எவ்வாறு பகுப்பாய்வு செய்வது என்பதை இது விளக்குகிறது நெருக்கடி காலங்கள். இந்த புதிய சந்தை தொடர்பான நாடுகளை எவ்வாறு வகைப்படுத்துவது என்பதையும் இந்த உரை விளக்குகிறது மிகப்பெரிய வாய்ப்புகள். மேலும், எப்படி செய்வது என்பது குறித்த பரிந்துரைகள் உள்ளன

## அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

- **நிலவின் தென் துருவத்தில் தரையிறங்க இந்தியா உள்பட பல்வேறு நாடுகள் முயன்று வருகின்றன.**
  - ○ இந்நிலையில் 2024ம் ஆண்டுக்குள் தென் துருவத்தில்

We Shine Academy™

மனிதர்களை தரையிறக்கும் நெடிய திட்டத்தை அமெரிக்க விண்வெளி ஆய்வு மையமான நாசா அறிவித்து செயல்பட்டு வருகிறது.

- **செய்தி துளிகள் :**
    - 1968ம் ஆண்டிலிருந்து 1972 வரை 9 விண்கலங்களை நாசா நிலவுக்கு அனுப்பியுள்ளது.
    - 1972ஆம் ஆண்டுக்கு பிறகு நிலவு தொடர்பான ஆராய்ச்சியை உலக நாடுகள் கைவிட்டன.
    - நிலவில் குடியிருப்புகளை அமைத்து மனிதர்களை குடியமர்த்தும் திட்டத்தின் முன்னோட்டமாக ஆர்டிமிஸ் அமையவுள்ளது.

## விருதுகள்

- **துபாயில் உள்ள இந்தியன் மேல்நிலைப் பள்ளியில் படிக்கும் சிறுமி சுஜிதா சதீஷ் (13).** இவர் **120 மொழிகளில் பாட்டு பாடியுள்ளார்.** இவருக்கு **"100 குளோபல் குழந்தை மேதை விருது"** கிடைத்துள்ளது.
    - இந்த விருதை டாக்டர் அப்துல் கலாம் பன்னாட்டு அறக்கட்டளை, இசையமைப்பாளர் ஏ.ஆர் ரகுமான் உட்பட பலர் இணைந்து வழங்குகின்றனர்.
    - **செய்தி துளிகள் :**
        - நடனம், இசை, கலை, எழுத்து, நடிப்பு, அறிவியல், கண்டுபிடிப்பு மற்றும் விளையாட்டு துறையில் சிறந்து விளங்கும் குழந்தைகளுக்கு

இந்த விருது வழங்கப்படுகிறது.

- இவர் 12 வயதில் 102 மொழி பாடல்களை 6.15 மணி நேரத்துக்கு மேலாக பாடியும் இரு உலக சாதனைகளை படைத்துள்ளார்.

## விளையாட்டு செய்திகள்

- **மூத்த வீரர், வீராங்கனைகள் பங்கேற்ற முதல் தேசிய மாஸ்டர்ஸ் விளையாட்டுப் போட்டிகள் புதுடெல்லியில் நடைபெற்றது.**
  - இந்த போட்டியில் தமிழகத்தில் இருந்து 70 வீரர், வீராங்கனைகள் பங்கேற்று தங்கம், வெள்ளி, வெண்கலப்பதக்கங்களை தமிழக வீரர், வீராங்கனைகள் வென்றுள்ளனர்.
  - **செய்தி துளிகள் :**
    - ஹாக்கி போட்டியின் ஆண்கள் பிரிவு பைனலில், தமிழக அணி தங்கப்பதக்கத்தையும் பெண்கள் பிரிவில் வெள்ளிப் பதக்கத்தை வென்றது.
    - நெட்பால் பிரிவில் தங்கம், தடகளப் போட்டிகளில் 10க்கு அதிகமான தங்கம், வெள்ளி, வெண்கலப்பதக்கங்களை தமிழக வீரர், வீராங்கனைகள் வென்றுள்ளனர்.

## திருக்குறள்



We Shine Academy TM

**குறள் எண் : 68**

குறள் பால் : அறத்துப்பால்

குறள் இயல் : இல்லறவியல்

குறள் அதிகாரம் : மக்கட்பேறு

**தம்மின்தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து**

**மன்னுயிர்க் கெல்லாம் இனிது.**

**விளக்கம்** : தம் மக்கள், தம்மை விடக் கல்வி அறிவுடையவராக இருப்பது, தம்மை விட உலகிலுள்ளவர்களுக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கும்.

We Shine Academy™